5th November 1966]

Colleges

* 425 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the new Training Colleges for men and women, respectively that the Government have proposed to open this year in the State with their proposed locations and strength?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Training College is proposed to be opened by Government during 1966-67.

திரு. வை. சங்கரன் : மகளிர் பயிற்சிக் கல்லூரி அவசியம் என்பதைக் கருதி, அதை அதிகமாகத் திறப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பிறகும் இதெல்லாம் கவனிக்கப்படும்.

திரு. சா. கணேசன் : இப்போது கல்வி அளவு பெருக்கப்பட்டு மாணாக்கர்கள் தொகை மிகுதிப்பட்டுக்கொண்டு வருகின்றதாலும், இன்னும் அதிகமாக மாணாக்கர்கள் தொகை பெருகக்கூடும் என்ற நிலவரம் இருப்பதாலும் போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்மார்கள் கிடைப்பதற்குத் தக்க முறையிலே ஆலோசித்து புதிய பயிற்சிக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கோ அல்லது இருக்கின்ற கல்லூரிகளை விரிவு படுத்துவதற்கோ அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா? அப்படியானால், அதனுடைய விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிப்பட்ட மகளிர் பயிற்சிக் கல்லூரி இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலே வேறு ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்படயிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : உயர் நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாவதால் ஆசிரியர்கள் பற்றாக்குறையிருக்கிறது. சில இடங்களில் பி.ஏ., பி.எஸ்ஸி., யில் ஒரு பகுதி தேறாதவர்கள் கூட ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். அந்தக் குறைப்பாட்டை நீக்குவதற்கு மேலும் ஆசிரியர்கள் பயிற்சி பள்ளிகளைத் திறப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியதுபோல ஆசிரியர் பயிற்சி பள்ளி அமைக்க தனி ஸ்தாபனம் முன்வந்துள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : நம்முடைய மாநிலத்தில் ஹைஸ்கூல் கட்டத்திலும், கல்லூரி கட்டத்திலும் கோ-எஜுகேஷனுக்கு ஆதரவு கொடுக்கப்படவில்லை. ஆகையால் தனியாக மகளிர் கல்லூரிகளைப் போதுமான அளவிற்கு அதிகமாக்க முயற்சி எடுத்துக்கொள்ள முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆண்டிலே தனிப்பட்ட ஸ்தாபனம் ஒன்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

[5th November 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அந்தப் பயிற்சிக் கல்லூரிகள் அமைப்பது எந்தெந்த இடத்திலே என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும். இப்பொழுது எந்த விதமான முடிவும் எடுத்துக்கொள்ளப்பட வில்லை.

* 426 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to implement the U.G.C. scale of pay for the College and University teachers in the State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Government of India have announced revised scales of pay for the University and College teachers for the Fourth Five-Year Plan period. The question of implementing the scales of pay is under examination.

திரு. வை. சங்கரன் : இப்போதுள்ள விகிதாசாரத்திற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ள விகிதாசாரத்திற்கும் உள்ள தாரதம்மியம், வேறுபாடு என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

* 427 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that there is no Women's College in Madras City with provision for studying 'Commerce' in the pre-university course for the successful girl students with Secretarial Course in the S.S.L.C. Class?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes.

திரு. வை. சங்கரன் : இன்றைக்குப் பெண்கள், ஹைஸ்கூலில் செகரடேரியல் கோர்ஸ் எடுத்துப் படித்தவர்கள் கல்லூரியில் வாணிபப் பிரிவில் சேர வேண்டுமென்றால் அதற்கு இடம் இல்லாத நிலையில் கஷ்டப்படுவதால் பெண்கள் கல்லூரியில் அந்தப் பிரிவைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிப்பட்ட கல்லூரிகளும் இருக்கின்றன ; அரசாங்கத்தின் கல்லூரிகளும் இருக்கின்றன. இது வரை இந்த மாதிரி மாணவிகள் கோருகிறார்கள் என்ற தகவல் வர வில்லை. தகவல் வந்தால் கவனிக்கலாம். தனிப்பட்ட கல்லூரிகளும் அனுமதி கோரலாம்.

திரு. சா. கணேசன் : தனிப்பட்ட கல்லூரிகள் இந்தப் பிரிவைத் துவக்க அனுமதி கோரலாம் என்று கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் நடத்துகிற பள்ளிகளில் இந்தப் பிரிவை வைத்து விட்டால் விண்ணப்பிக்கிறவர்களுக்குச் சுலபமாக